செய்தி வெளியீடு எண்.31-2017 நாள்: 15.08.2017

**விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தேசிய கொடியினை ஏற்றி வைத்து, காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.**

**சுதந்திர தின விழாவில் 238 பயனாளிகளுக்கு ரூ.1,51,97,766/- மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

**விழாவில் சுதந்திர போராட்ட தியாகிகள் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.**

**விழாவில் 1000க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்களின் கண்கவர் ஆடல், பாடல் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.**

**சிறப்பாக பணியாற்றிய 199 அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப. அவர்கள் வழங்கினார்.**

******

விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள காவல்துறை அணிவகுப்பு மைதானத்தில் சுதந்திர தின விழா இன்று வெகுவிமர்சையாக கோலாகலத்துடன் கொண்டாடப்பட்டது. முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தேசிய கொடியை ஏற்றி வைத்து, காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.ஜெயக்குமார் அவர்கள் உடன் செல்ல காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். அணிவகுப்பினை திறந்த ஜீப்பில் சென்று பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து தீயணைப்புத்துறை, வனத்துறை, ஊர்காவல்படை, சாரண, சாரணியர், தேசிய மாணவர் படை, ஜுனியர் ரெட்கிராஸ் ஆகியோர்களின் அணிவகுப்பு மரியாதையினையும் ஏற்றுக் கொண்டார்.

சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டதற்கான நிகழ்வை குறிக்கும் வகையில் வெண்புறாக்களையும், வண்ண பலூன்களையும் பறக்கவிட்டார். மேலும், சுதந்திர போராட்ட தியாகிகளுக்கு அவர்களின் இருப்பிடத்திற்கே சென்று, அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து, மரியாதை செலுத்தினார். பின்னர், தியாகிகள் அனைவருக்கும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் இனிப்புடன் காலை சிற்றுண்டி வழங்கி உபசரிக்கப்பட்டனர்.

தொடர்ந்து, சுதந்திர போராட்டத் தியாகிகளின் வாழ்க்கை வரலாறு அடங்கிய 300 புகைப்படங்கள் உள்ள புகைப்படக் கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்து பார்வையிட்டார். சுதந்திர போராட்ட தியாகிகளின் புகைப்படக் கண்காட்சியினை பள்ளி மாணவ மாணவியர்கள், பொதுமக்கள் கண்டு களித்தனர்.

ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் முன்னாள் படைவீரர் நலத்துறையின் மூலம் மூக்குக்கண்ணாடி மற்றும் திருமண நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் 5 பயனாளிகளுக்கு ரூ.92,000/- மதிப்பீட்டிலும், வருவாய்த்துறையின் மூலம் திருமண உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, இயற்கை மரணம், தற்காலிக இயலாமை, நலிந்தோர் குடும்ப நலம், சாலை விபத்து நிவாரணத்தொகை வழங்கும் திட்டங்களின் கீழ் 188 பயனாளிகளுக்கு ரூ.1,00,00,000/-

மதிப்பீட்டிலும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் மூலம் 5 பயனாளிகளுக்கு ரூ.20,000/- மதிப்பீட்டில் தையல் இயந்திரங்களையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் 2 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.11,000/- மதிப்பீட்டில் ஊன்றுகோல் மற்றும் காதொலி கருவியினையும், தோட்டக்கலைத்துறையின் மூலம் 3 பயனாளிகளுக்கு ரூ.1,65,000/- மதிப்பீட்டில மினி டிராக்டர்களையும், பட்டுபூச்சி வளர்ப்புத்துறையின் மூலம் 23 பயனாளிகளுக்கு ரூ.12,07,500/- மதிப்பீட்டில் பட்டுப்புழு வளர்ப்பு தளவாடங்களையும், வேளாண்மைத்துறையின் மூலம் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 5 பயனாளிகளுக்கு ரூ.600/- மதிப்பீட்டில் தென்னங்கன்றுகளையும், தாட்கோ மூலம் 4 பயனாளிகளுக்கு ரூ.32,37,666/- மதிப்பீட்டில் மான்ய திட்டத்தில் வாகனங்களையும், சிறுசேமிப்புப் பிரிவின் மூலம் 3 பயனாளிகளுக்கு சிறுசேமிப்பு குழுவின் மூலமாக வழங்கப்படும் உதவிகளையும் என மொத்தம் 238 பயனாளிகளுக்கு ரூ.1,51,97,766/- மதிப்பீட்டில் அரசின் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து விழுப்புரம் எம்.ஆர்.ஐ.சி. அரசு உதவிபெறும் உயர்நிலைப் பள்ளி, ராஜ ஸ்ரீ சுகர்ஸ் ராமகிருஷ்ணா வித்தியாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, வளவனூர் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, ஸ்ரீ ராமகிருஷ்ணா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, கள்ளக்குறிச்சி எ.கே.டி. அகாடமி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளிலிருந்து 1000க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்குகொண்ட கலைநிகழ்ச்சிகள் மிகச்சிறப்பாக நடைபெற்றன. கலைநிகழ்ச்சிகளில் பங்குகொண்ட அனைத்து பள்ளிகளுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பரிசுகளை வழங்கினார். கலை நிகழ்ச்சிகளை திரளான பொதுமக்களும், மாணவ மாணவியர்களும் கண்டு களித்தனர். அதனைத் தொடர்ந்து சிறப்பாக பணியாற்றிய செய்தி மக்கள் தொடர்புத்துறை, பொதுப்பணித்துறை, வருவாய்த்துறை, சுகாதாரத்துறை, கல்வித்துறை, வனத்துறை, காவல்துறை வேளாண்மைத்துறை ஆகிய துறைகளைச் சோர்ந்த 199 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார். சுதந்திர தின விழாவை சிறப்பாக நடத்திட பல்வேறு ஏற்பாடுகளையும், பணிகளையும் செய்து ஒத்துழைப்பு நல்கிய சம்பந்தப்பட்ட அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டார்.

இவ்விழாவில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.ஜெயக்குமார், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.சிம்டன்ஜீத் சிங் கஹ்லான்,இ.ஆ.ப., மாவட்ட முதன்மை நீதிபதி திருமதி.சரோஜினி தேவி, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ரா.பிரியா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.அனுசுயாதேவி, கோட்டாட்சியர்கள் திருமதி.சரஸ்வதி, திருமதி.மல்லிகா, திரு.செந்தாமரை, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.மகேந்திரன், முதன்மைக் கல்வி அலுவலர் திரு.ஆஞ்சலோ இருதயசாமி மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள், பொதுமக்கள், மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.